**தலைப்பு 261 – காலி மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 261 – காலி மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 22 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

காலி மாவட்டச் செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாடு ரூபா 1,157.00 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 1,151.92 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், காலி மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 5.08 மில்லியன் அதாவது 0.44 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,079.00 | 1,074.73 | 4.27 | 0.40 |
| மூலதனம் | 78.00 | 77.19 | 0.81 | 1.04 |
| **மொத்தம்** | **1,157.00** | **1,151.92** | **5.08** | **0.44** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்டச் செயலகத்திற்கு 26 அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களினால் ரூபா 3,271 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 3,040 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 231 மில்லியன் அதாவது 7.06 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

காலி மாவட்டச் செயலகத்திற்குரிய 26101 ஆம் விடய இலக்கத்தின் கீழுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 60.00 | 59.98 | 52.00 | 58.55 | 225.00 | 204.94 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

காலி மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 7002/0000/00/0308/0016/000 ஆம் இலக்கக் கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.19 மில்லியனாகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

காலி மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பின்வரும் 04 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 402.37 மில்லியனாகும்.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0094/000 | 4.94 |
| 6000/0000/00/0013/0062/000 | 29.44 |
| 6000/0000/00/0016/0045/000 | 309.07 |
| 6000/0000/00/0017/0015/000 | 58.92 |
| **மொத்தம்** | **402.37** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

காலி மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

காலி மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள போபே போத்தல மற்றும் எல்பிட்டிய பிரதேச செயலகங்களினால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல்

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் காலி மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) எல்பிட்டிய பொது விளையாட்டு மைதானத்தை புனரமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 30,000,000 நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. 2 கட்டங்களின் கீழ் மதிப்பீடுகள் தயாரித்தல்,

அங்கீகரித்தல் மற்றும் வேலையை மேற்பார்வை செய்தல் என்பன தென் மாகாண பிரதிப் பிரதம செயலாளரிற்கு (பொறியியல் சேவை) கையளிக்கப்பட்டிருந்ததுடன் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரருடன் 50 நாட்களிற்குள் 1 மற்றும் 2 ஆம் கட்டங்களை பூர்த்திசெய்வதற்கான இணக்கப்பாட்டுடன் 2014 நவம்பர் 10 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

- 2016 ஒக்தோபர் மாதம் வரையில் வேலையின் முதலாம் கட்டத்திற்காக ரூபா 28,971 தொகையும் இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 12,278,179 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஒக்தோபர் 28 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பின் போது அவ் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

- அந்த ஒப்பந்தம் 50 நாட்களிற்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ஒப்பந்த உடன்படிக்கையின் அளவீட்டுப் பட்டியலில் ஆரம்ப செலவினங்களின் கீழ் தொழில்நுட்ப உத்தியோகத்தரிற்கு 6 மாதங்களிற்கு ரூபா 150,000 தொகையும் இரண்டாவது கட்டத்திற்காக வேலைத்தள பொறியியலாளருக்கு 09 மாதங்களிற்கு ரூபா 315,000 தொகையும் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் வேலையை மேற்பார்வை செய்வதற்காக அந்த உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

- கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவற்றிற்கு முரணாக செயலாற்றல் முறி காப்புறுதிக் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

- வழங்கப்பட்ட மண்ணின் தரத்திற்கான ஆய்வுகூட அறிக்கை இல்லாமல் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட கெட்டியாக்கப்பட்ட மண் அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டு 6450 மீற்றர் கியூப்களிற்காக ரூபா 3,354,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- வேலை விடய இலக்கம் பீ-3 இன் கீழ் மண்ணைப் பரவி மட்டப்படுத்துதல் இயந்திரங்களின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மனித சக்தியை அடிப்படையாகக்கொண்ட கொடுப்பனவு காரணமாக ரூபா 956,535 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- மதிப்பிடப்பட்ட வேலை விடயத்தின் பிரகாரம் ஆற்று மண்ணை பயன்படுத்துவதற்குப் பதிலாக கடல் மண்ணைப் பயன்படுத்தியதன் காரணமாக ரூபா 799,600 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- திட்டத்தின் பிரகாரம் கால்வாய் அடிப்பகுதிக்கு இடப்பட வேண்டியிருந்த 150 மில்லிமீற்றர் மண் அடுக்கிற்குப் பதிலாக 50 மில்லிமீற்றர் மண் அடுக்கு இடப்பட்டதன் காரணமாக ரூபா 248,640 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- உரிய நியமத்தின் பிரகாரம் நீர் விநியோகக் கால்வாய் முறைமை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) எல்பிட்டிய பிரதேச செயலகத்தால் குருபல்பொல வீதியின் கொங்கிறீட் இடுதல் முடிவடைந்த இடத்திலிருந்து 107 மீற்றர் நீளத்திற்கு கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 494,689 மதிப்பிடப்பட்ட பெறுமதியின் கீழ் நிர்மாண நிறுவனமொன்றிற்கு 2016 திசெம்பர் 12 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம், 5 அங்குல தடிப்புத்தன்மையுடன் வீதி கொங்கிறீட் அடுக்கு நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் வீதியின் பல இடங்களில் தடிப்புத்தன்மை 4, 3 மற்றும் 2 அங்குலங்களில் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. வீதியின் பல இடங்களில் கொங்கிறீட் அடுக்கு வெடித்திருந்ததுடன் மேலும் மூன்று இடங்களில் கொங்கிறீட் அடுக்கு உடைந்திருந்தது.

(iii) ரூபா 1,942,013 மதிப்பிடப்பட்ட தொகையின் கீழ் வள்ளபகல பபிலியான வீதியின் 400 மீற்றர்களிற்கு கொங்கிறீட் இடுவதற்காக 2016 திசெம்பர் 08 இல் எல்பிட்டிய பிரதேச செயலகத்தால் விவசாய அமைப்பொன்றிற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. இடப்பட்ட கொங்கிறீட் மேற்பரப்பிற்குப் பொருத்தமான கொங்கிறீட் கலவை பயன்படுத்தப்படாமை காரணமாக வீதிக்கு குறுக்காக 07 இடங்களில் வீதி உடைந்திருந்தது.

(iv) ரூபா 1,456,357 மதிப்பிடப்பட்ட தொகையின் கீழ் உடுவில மெதவத்த வீதியின் 168.5 மீற்றர்களில் முற்கலவைக் கல் பதிப்பதற்காக எல்பிட்டிய பிரதேச செயலகத்தினால் விவசாய அமைப்பொன்றிற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் வேலை விடய இலக்கம் 04 இன் கீழ் முற்கலவைக் கல் பதிக்கும் வீதியின் இரு பக்கங்களிலும் 8 அங்குல ஆழம் மற்றும் 6 அங்குல அகலத்தில் கொங்கிறீட் இடப்பட வேண்டிய போதிலும் 283 மீற்றர் நீளத்திற்கு 5 அங்குல ஆழம் மற்றும் 6 அங்குல அகலத்தில் கொங்கிறீட் இடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மதிப்பீட்டிற்கு முரணாக ரூபா 162,766 ஆன மொத்தத் தொகை ஆற்றப்படாத வேலைகளை உள்ளடக்கியுள்ள மொத்த வேலை விடயத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது.

(v) பத்தேகம பிரதேச செயலகத்தால் கறுவலதெனிய நெல் வயல் வெளியின் நடுவில் 970 மீற்றர் நீளமான புதிய கால்வாய் வெட்டும் செயற்திட்டத்திற்காக ரூபா 906,574 தொகை செலவிட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் நெல் வயலின் நடுப்பகுதியிலுள்ள விதியின் ஊடாக பாலம் நிர்மாணிக்கப்படாததன் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட கால்வாயின் நீர் வெளியேற்றப்பட்டிருக்காததுடன் 2017 மார்ச் 08 வரையிலும் 1 அடி அளவிலான களிமண் நிரம்பி காடாகியிருந்ததுடன் கால்வாய் பயன்படுத்தப்பட முடியாத நிலையிலிருந்தது.

(vi) பத்தேகம பிரதேச செயலகத்தால் கினிமெல்லகஹ வயலில் பொட்டனியாய தடுப்புச்சுவரை புனரமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக பளாத் நெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 500,000 தொகையும் தென் மாகாண சபையின் றுகுணு உதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 100,000 தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. வேலையை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்த சங்கத்துடன் 2014 நவம்பர் 03 மற்றும் திசெம்பர் 08 ஆகிய திகதிகளில் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சிலிண்டர்கள் இடுவதற்கு ரூபா 490,000 செலவிட்டு 08 அணைக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நீரைக் கட்டுப்படுத்தும் கதவுகள் இடப்படாததனால் ரூபா 100,000 மீதித் தொகை திருப்பியனுப்பப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் அப் பகுதி பூர்த்தி

செய்யப்படாததனால் பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பகுதி பயன்படுத்த முடியாதிருந்ததுடன் 02 வருடங்களிற்கு மேலாக முழுமையாக விளைவற்றிருந்தது.

**(ஆ) திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இமதூவ பிரதேச செயலக பிரிவின் 3 திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக 302 பயனாளிகளிற்கு வழங்கப்பட்ட ரூபா 8,283,587 கூட்டுத்தொகையான கடன் மீதி காலங்கடந்த கடனாகவும் 90 பயனாளிகளிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,147,054 கூட்டுத்தொகையான கடன் மீதி அறவிடமுடியாக் கடனாகவும் இனங்காணப்பட்டிருந்ததுடன் அத் தொகைகளை அறவிடுதல் சந்தேகத்திற்கிடமாகவிருந்தது.

## 3.3 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 158,033,225 கூட்டுத்தொகையான 296 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

26101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 03 பிரதேச செயலகங்களிலிருந்து 05 ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 976,745 கடன் மீதிகள் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

காலி மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான ஜீப் மற்றும் நிசான் மோட்டார் வாகனம் என்பன ஓட்டத்திலிருந்து நிறுத்தப்பட்டு 2016 திசெம்பர் 31 வரையிலும் முறையே 07 மாதங்கள் மற்றும் 02 வருடங்களான காலம் கடந்திருந்த போதிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1999 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட யக்கலமுல்ல பிரதேச செயலகத்தின் அரசாங்க விடுதிகள் திறக்கப்பட்டு 17 வருடங்களிற்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் அக் காலப்பகுதியினுள் பிரதேச செயலாளர் எவரும் அதில் குடியிருக்கவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

போபெ – போத்தல பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள 01 ஏக்கர் 03 றூட்கள் 21 பேர்ச்கள் காணியின் உரித்துறுதியை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பத்தேகம பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ரூபா 791,721 கூட்டுமொத்தப் பெறுமதியான 02 செயற்திட்டங்கள் மற்றும் ஹிக்கடுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ரூபா 2,785,000 கூட்டுமொத்தமான 06 செயற்திட்டங்கள் வேலை ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

### 3.7 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

காணி அமைச்சினால் நடாத்தப்பட்ட கிராம விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் காணியற்ற மக்களிற்கு காணிகளை வழங்கும் நோக்கில் நாகொட பிரதேச செயலாளர் மற்றும் தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை ஒன்றிணைந்து நாகொட பிரதேச செயலக பிரிவில் 218சீ உகோவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள 467 ஏக்கர்கள் 1 றூட் 26 பேர்ச்கள் ஆன அப்தோப்வத்த காணியின் சுவீகரிப்பு நடவடிக்கைகள் 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 மே 21 ஆம் திகதிய 1080/13 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினூடாக காணி சுவீகரிப்புக் கட்டளைச் சட்டத்தின் 38(ஆ) உப கட்டளையை வழங்கியதன் மூலம் அக் காணி பிரதேச செயலாளரின் பொறுப்பிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டு வரையிலும் அதில் 61 ஏக்கர்கள் 142 பேர்ச்கள் கிராம விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் நோக்கத்திற்கு முரணாக மேலும் 01 ஏக்கர் 58 பேர்ச்கள் ஹோட்டல் கைத்தொழிலிற்காக வழங்கப்பட்டிருந்தது.

(இ) 169 ஏக்கர் காணி பகிர்ந்தளிப்பதற்கு பொருத்தமற்றதாக இனங்காணப்பட்டிருந்ததுடன் வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு அந்தக் காணியை வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டில் அளவை வேண்டுகோள் அளவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந் நடவடிக்கைகள் 2017 யூன் 22 வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காணி சுவீகரிப்பிற்காக இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் 1999 ஒக்தோபர் 19 இல் ரூபா 1,600,000 பிரதேச செயலாளரிற்கு வழங்கப்பட்டிருந்தது. அத் தொகையை முதலீடு செய்து உழைக்கப்பட்ட ரூபா 1,856,714 தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 1,585,625 பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) அதன் பிரகாரம் காணி விரிவாக்கும் நோக்கில் காணி சுவீகரிக்கப்பட்டு 17 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அச் செயற்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்ததுடன் அக் காணி அனுமதியற்றவர்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டிருந்தது.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கோனபீனுவல பிரதேச செயலகத்தினால் 2016 திசெம்பர் 31 இல் 3 நிறுவனங்களிடமிருந்து ரூபா 627,650 பெறுமதியான கணனி மற்றும் உபபாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இக் கொள்வனவிற்காக பெறுகைக் குழுவால் 05 நிறுவனங்களிற்கு 2016 திசெம்பர் 30 இல் கேள்வி கோருவதற்கான கடிதங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் விலைமனு அனுப்பப்பட வேண்டிய முடிவுத் திகதியாக அதே திகதி இருந்தது. அத் திகதியில் ஒரு நிறுவனத்தால் மாத்திரம் விலைமனு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைக் குழுவால் அவ் விலைமனு பரீட்சிக்கும் போது கூறுவிலைகளிற்காக கேள்வி கோரல் கடிதம் அனுப்பப்பட்டிருக்காத ஏனைய 03 நிறுவனங்களிடமிருந்து 2016 திசெம்பர் 30 இன் பின்னர் பெறப்பட்ட கூறுவிலைகளிற்காகவும் 2016 திசெம்பர் 30 ஆம் திகதியிடப்பட்ட திகதி முத்திரை பொறிக்கப்பட்டு விலை ஒப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூறுவிலை பெறப்பட்ட நிறுவனத்திலும் பின்னர் கூறுவிலை பெறப்பட்ட 02 நிறுவனத்திலும் மேற்படி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக் கொள்வனவிற்குரிய பெறுகை நடைமுறை முறையாகவோ வெளிப்படையானதாகவோ மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

**3.9 நட்டங்களும் இழப்புக்களும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கரந்தெனிய பிரதேச செயலகத்தில் கடமையிலீடுபட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 815,650 தொகையான காசோலை மோசடி தொடர்பாக இரண்டு நீதிமன்ற வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இதனால் காசோலை மோசடியால் ஏற்பட்ட நட்டம் உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பலாங்கொடை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான வாகனமொன்றிற்கு 2001 யூன் 26 இல் ஏற்பட்ட விபத்து தொடர்பாக காலி மாவட்ட நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் இரண்டாவது பிரதிவாதியிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 130,168 நட்டம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.10 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சீராக்கம் செய்யப்படாதிருந்த பந்திகளுக்கான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 3.3 | மாவட்ட செயலகத்திற்குரிய நிர்வாக உத்தியோகத்தர் விடுதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெளித்தரப்பினரால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா |

| | | |
|---|---|---|
| | | 76,200 தொகையான விடுதி வாடகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| 2014 | 3.1(அ)(ii) | வீதிக்கு காபட் இடுவதற்காக 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு 27 செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 139,333,203 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகை 2016 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 3.2.2(ஈ)(i) | பட்டபொல மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக 2014 திசெம்பர் 22 இல் ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,363,328 தொகையும், 2014 திசெம்பர் 09 இல் மதியுரைச் சேவைக் கட்டணமாக ரூபா 60,929 தொகையும், 2014 திசெம்பர் 19 இல் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு படிகளாக ரூபா 16,250 தொகையும் செலவிடப்பட்டு வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 2016 யூலை 31 வரையிலும் செயற்திட்டத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் செலுத்தப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 3.2.2(ஈ)(ii) | அம்பலாங்கொடை கஹட்டபிட்டிய விளையாட்டு மைதானத்தை மீளமைத்தல் செயற்திட்டத்திற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக 2014 திசெம்பர் 29 இல் ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,253,676 தொகையும், 2014 திசெம்பர் 09 இல் மதியுரைச் சேவைக் கட்டணமாக ரூபா 56,019 தொகையும், 2014 திசெம்பர் 19 இல் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுப் படிகளாக ரூபா 16,250 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. 2016 யூலை 31 வரையிலும் இச் செயற்திட்டத்தின் உடன்படிக்கைக் காலப்பகுதி காலாவதியாகியிருந்ததுடன் மேற்குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் வேலை 20 சதவீத அளவேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

**3.11 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) மாவட்டச் செயலகத்தினால் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாடுகளிலிருந்து 2015 ஆம் ஆண்டின் போது 03 பிரதேச செயலகங்களுடாக அமுல்ப்படுத்தப்பட்ட ரூபா 6,000,000 மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கான 12 வீதி கொங்கிறீட் இடுதல் செயற்திட்டங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது அக்மீமன பிரதேச செயலகத்தினால் அமுடுல்ப்படுத்தப்பட்ட ரூபா 1,277,556 மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கான 03 செயற்திட்டங்கள் என்பன காணப்பட வேண்டிய

ஒருங்கிணைந்த சக்தி நியமத்தை விட குறைவாக காணப்பட்டது. அச் செயற்திட்டங்கள் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்படாததனால் அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட சக்தி மற்றும் நிலைத்திருக்கக்கூடிய தன்மை தொடர்பில் சிக்கல் தோன்றியிருந்தது.

(ஆ) யக்கலமுல்ல பிரதேச செயலகத்தினால் மண்சரிவினால் பாதிப்படைந்து நாகியாதெனிய கொடஹேன்கந்தவில் குடியமர்ந்துள்ள குடும்பங்களிற்கு காணிகளை வழங்குதல் மற்றும் காணியற்ற மக்களிற்கு காணிகளை வழங்குதலை நோக்கமாகக்கொண்டு நாகியாதெனிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வட்டவல பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமாகவிருந்த 36 ஏக்கர்கள் 02 றூட்கள் காணியை சுவீகரிக்கும் முன்மொழிவுத்திட்டம் 1997 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. காணியை அளவிடுதல் தொடர்பாக பெருந்தோட்டக் கம்பனியுடன் காணப்பட்ட நீதிமன்ற வழக்கின் தீர்ப்பானது 2001 ஒக்தோபர் 17 இல் பெறப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு வரையிலும் தீர்ப்பை பெற்றதிலிருந்து 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அக் காணி சுவீகரிப்புச் செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடவத்சதர பிரதேச செயலக பிரிவிலுள்ள 02 கிராம அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ள 83 பேர்ச்கள் காணி மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான 09 லொட்கள் காணி என்பன 09 தனிநபர்களினால் 01 வருடம் முதல் 30 வருடங்கள் வரையான காலவீச்சில் அங்கீகரிக்கப்பட்டிருக்காத பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தன.

(ஈ) கடவத்சதர பிரதேச செயலக பிரிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 08 சுனாமி வீட்டுத் திட்டங்களில் 370 வீடுகள் இடம்பெயர்ந்த நபர்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 செப்தெம்பர் 02 வரையிலும் அவ் வீடுகளில் 205 வீடுகளிற்கான உரிமைத்துவத்தை தெளிவுபடுத்தி உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) போபெ – போத்தல பிரதேச செயலகத்தினால் மாகால்ல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் ஹபுகல நீர் தூயதாக்கல் செயற்திட்டத்திற்கான காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக பெறப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 191,550 தொகை 2017 யூலை மாதம் வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அளவைக் கட்டணங்களை செலுத்துவதற்காக ரூபா 55.67 பற்றாக்குறை இந் நடவடிக்கைகளில் தாமதத்தை விளைவித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பத்தேகம பிரதேச செயலகத்தால் திலக உதாகம கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மு.பி.கா 1715 நில வரைபிற்குச் சொந்தமான 13, 16 மற்றும் 15, 18 ஆம் இலக்க துண்டுகளில் கருங்கல் உடைப்பதற்காக தனிநபரொருவரிற்கு குத்தகை அடிப்படையில் 02 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 15, 18 ஆம் இலக்க துண்டுகளிற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர எல்லையை விஞ்சி 19 மற்றும் 23 ஆம் இலக்க துண்டுகளில் அங்கீகாரமின்றி கருங்கற்கள் உடைக்கப்பட்டமையின் காரணமாக அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு உடைக்கப்பட்ட கருங்கற்களிற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசிறையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) இமதூவ பிரதேச செயலகத்தினால் போகஹகொட நகர அபிவிருத்திக்கான காணி சுவீகரிப்பிற்காக ரூபா 2,850,000 தொகை 2014 ஒக்தோபர் 20 இல் இமதூவ பிரதேச சபையினால் இமதூவ பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையிலும் பணம் வழங்கப்பட்டு 02 வருடங்களை விட அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் சுவீகரிப்பானது ஆரம்பக் கட்டத்தில் இருந்ததுடன் பெறப்பட்ட பணம் நீண்ட காலத்திற்கு முதலீடு செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) எல்பிட்டிய பிரதேச செயலகத்தால் 2015 யூலை 07 மற்றும் 2016 சனவரி 06 ஆகிய திகதிகளில் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட முறையே பிடி/ஜிபிஎஸ்/130/9/14/எம்சீ (ii) மற்றும் எம்சீ (iii) ஆம் இலக்க கடித அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததனால் பிரதேச செயலகத்தின் சேவையிலிருந்து இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1(அ) தரத்திற்கு நியமனம் பெற்ற 05 அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 698,920 மோட்டார் சைக்கிள் பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.12 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு உள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 65 | 62 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 44 | 31 | 15 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,775 | 1,673 | 133 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 173 | 159 | 15 | 01 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 06 | - | 06 |
| | **மொத்தம்** | **2,057** | **1,931** | **166** | **40** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2017 யூலை 14 வரையிலும் பதவியணியினரில் 40 பேர் மேலதிகமாகக் காணப்பட்ட போதிலும் அதற்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.